CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY
CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY
CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY
CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY
CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY

CHAMPION ACADEMY – NEW KATTANKUDY

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOL AND FOR THE AWARD OF BURSARIES, **AUGUST 2022**

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை, 2022 **ஆகஸ்ட்**

வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** எழுதுக.
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
பெற்ற புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கியபுள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

[பக். 2ஐப் பார்க்க...

www.ikedu.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English


தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன


www.learneasy.lk || www.lkedu.lk

01. பின்வரும் வினாவில் முதலில் தரப்பட்டுள்ள உருவினை பூரணப்படுத்தத் தேவையான பகுதியைத் தெரிவு செய்க.



(1) (2) (3)


02. பின்வரும் உருக்களில் ஓர் உரு முதலில் தரப்பட்டுள்ள உருவினை விட புதிதாக மூன்று வேறுபாடுகளுடன் காணப்படுகின்றது. அவ்வுருவைத் தெரிவு செய்க.




(1) (2) (3)

03. பின்வரும் உருக்களுக்கு இடையிலான தொடர்பினை அவதானித்து வெற்றிடத்தில் வர வேண்டிய உருவைத் தெரிவு செய்க.




(1)  (2)  (3) 


04. கட்டத்தினுள் வழங்கப்பட்டுள்ள உருத்தொகுதியுடன் சேர்ப்பதற்குப் **பொருத்தமற்ற** உருவைத் தெரிவு செய்க.





(1)  (2)  (3)

05. பின்வரும் உருக்களை ஒரு குறித்த இயல்பின் அடிப்படையில் இரு சோடிகளைக் கூட்டங்களாக்கிய பின்னர் எஞ்சியுள்ள உருவின் ஆங்கில எழுத்ததைத் தெரிவு செய்க.




(1) E

(2) B


(3) D

[பக். 3ஐப் பார்க்க...

06. பின்வரும் உருக்களில் ஓர் ஆடியில் விம்பமாகக் காட்சி தருகையில் மாற்றமுற்றுக் காணப்படும் உருவைத் தெரிவு செய்க.



(1)




(2)




(3)

07. பின்வரும் உருக்கோலத்தினை அவதானித்து அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.




.....?.....

(1)



(2)



(3)




08. **93152867** இவ்வெண்ணில் இலக்கம் ஒன்றும் இலக்கம் ஐந்தும் இடமாற்றம் செய்யப்படுகின்றது. அதே போன்று இலக்கம் ஆறும் இலக்கம் இரண்டும் இடமாற்றம் செய்யப்பட்டதன் பின்னர் வலப்பக்கத்திலிருந்து இரண்டாவதாக வரும் இலக்கம் யாது?

(1) 1 (2) 2 (3) 3

09. ஒரு நிறுவனத்தில் எட்டு வேலையாட்கள் உள்ளனர். ஒவ்வொரு மாதமும் வேலையாட்களின் பெயர்ப்பட்டியலின் ஒழுங்கு முறைக்கேற்ப ஒவ்வொரு வேலையாளிற்கும் பரிசுக் கூப்பன்கள் வழங்கப்படும். குமாரி இந்த நிறுவனத்தினமிருந்து ஜூலை மாதம் பரிசுக் கூப்பனைப் பெற்றால், அவர் மீண்டும் எந்த மாதத்தில் பரிசுக் கூப்பனைப் பெறுவார்?

(1) பெப்ரவரி (2) மார்ச் (3) ஏப்ரல்

10. பின்வரும் உருக்களை குறித்தவொரு கோலத்திற்கேற்ப ஒழுங்குபடுத்தும் போது வேறுபடும் உருவின் ஆங்கில எழுத்து யாது?




(1) உரு B (2) உரு C (3) உரு D

11. ஒரு இட்லித் தட்டில் பத்து இட்லிகளை மாத்திரம் ஒரே தடவையில் அவிக்க முடியும். ஒரு தடவை அவிப்பதற்கு பத்து நிமிடங்கள் தேவைப்படுகின்றன. பதினாறு இட்லிகளை அவிக்க எத்தனை நிமிடங்கள் தேவைப்படும்?

(1) 16 (2) 10 (3) 20

12. அருகிலுள்ள உருவில் காணப்படும் முக்கோணிகளின் எண்ணிக்கை,



(1) 5 (2) 6 (3) 7

[பக். 4ஐப் பார்க்க...

www.ikeda.lk


13. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சுசிலா கோயிலுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளாள். சுசிலா முந்தநாள் கோயிலுக்குச் சென்றாளாயின் நாளையின்றைக்கு என்ன நாளாகும்?


(1) ஞாயிறு (2) திங்கள் (3) செவ்வாய்


14. பெட்டி A இலுள்ள பழங்களின் எண்ணிக்கை பெட்டி B இலுள்ள பழங்களின் எண்ணிக்கையிலும் பார்க்க ஐந்து குறைவாகும். பெட்டி B இலிருந்து ஒன்பது பழங்கள் எடுக்கப்பட்டு பெட்டி A இல் இடப்படுகின்றன. தற்போது பெட்டி B இலிருக்கும் பழங்களின் எண்ணிக்கை பெட்டி A இலுள்ள பழங்களின் எண்ணிக்கையிலும்,

(1) 6 கூடவாகும். (2) 13 கூடவாகும். (3) 13 குறைவாகும்.

15. பின்வரும் எண்கோலத்தில் இடைவெளியில் வரவேண்டிய எண் யாது?








(1) 45 (2) 5 (3) 25

16. பின்வரும் பாடலினால் குறிப்பிடப்படுவது எது?

காற்றில் கலக்கும் மாசுக்களைக்
கரியமில வாயுவைத் தானுறிஞ்சி
ஊற்றாய்க் கொடுக்கும் உயிர்க் காற்றை
உயிர்கள் வாழத் தந்திடுமே!

(1) நீரூற்று (2) மரங்கள் (3) காற்று

17. தரப்பட்டுள்ள உருக்களின் வரிசையில் இடைவெளியில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.





(1) (2) (3)

18. ஒரு வகுப்பில் 60 மாணவர்கள் உள்ளனர். இவர்களுள் நான்கு மாணவர்களுக்கு ஒரு தலைவர் என்ற வகையில் குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். எனின், பிரிக்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை யாது?

(1) 15 (2) 12 (3) 14

19. உமாவிடம் 10 மாபிள்கள் உள்ளன. அவளிடம் மூன்று மாபிள்கள் குறைவாக இருந்ததால் அது சுமனிடம் இருக்கும் மாபிள்களின் எண்ணிக்கையின் அரைவாசியாகும். இதன்படி,

A – உமாவிடம் 13 மாபிள்கள் உள்ளன.

B – உமாவிடமுள்ள மாபிள்களின் இரு மடங்கான மாபிள்கள் சுமனிடம் உள்ளன.

C – சுமனை விட உமாவிடம் 10 மாபிள்கள் குறைவாக உள்ளன.

மேலுள்ள கூற்றுக்களுள் சரியான கூற்றுக்கள் யாவை?

(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) B உம் C உம்

[பக். 5ஐப் பார்க்க...

www.ikedu.lk


20. எனது நண்பன் மகிழ்ச்சியடையும் சந்தர்ப்பங்களில் எல்லாம் மிக இனிமையாகப் பாடுவான். நானும் அவனும் பாடசாலை விடுமுறை முடிந்து ஊரிலிருந்து பேருந்தில் பாடசாலை விடுதிக்குச் சென்று கொண்டிருந்தோம். பேருந்து காட்டு வழியாகச் சென்ற போது வீசிய சில்லென்ற மெல்லிய தென்றல் எங்களை அரவணைத்துச் செல்லும் போது எனது நண்பன் வீட்டிலுள்ள தனது தாயை நினைத்து களிப்படைந்தான். அப்போது எனக்கு பாடல் ஒன்று கேட்க வேண்டும் போலிருந்தது. நான் இப்போது எனது நண்பனை பாடும் படி கேட்டால் அவன்,

(1) பாடுவான் (2) பாடமாட்டான் (3) அதுபற்றிக் கூறமுடியாது

21. ஒரு கூட்டில் 10 மஞ்சள் நிறக் குருவிகளும், 12 நீல நிறக் குருவிகளும், சில பச்சை நிறக் குருவிகளும் உள்ளன. அங்குள்ள பச்சை நிறக் குருவிகளின் எண்ணிக்கை மஞ்சள் நிறக் குருவிகளின் எண்ணிக்கையை விட அதிகமாகும். ஆனால் நீல நிறக் குருவிகளின் எண்ணிக்கையை விடக் குறைவாகும். எனின், கூட்டிலிருந்த குருவிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 33 (2) 30 (3) 22

22. கீழே தரப்பட்டுள்ள A , B ஆகிய தராசுகள் சமநிலையில் உள்ளன.



தராசு - A



தராசு - B

தராசு C ஐ சமநிலைப்படுத்த எத்தனை சதுர வடிவ நிறைகளை வெற்றிடத்தில் வைக்க வேண்டும்?



தராசு - C

(1) 


(2) 


(3) 

23. 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஐந்து ஞாயிற்றுக் கிழமைகள் உள்ளன. அவற்றுள் மூன்று தினங்களின் திகதிகள் இரட்டை எண்களாக உள்ளன. எனின், ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி வாரத்தின் எந்த தினத்தில் வருகின்றது?

(1) சனிக்கிழமை (2) ஞாயிற்றுக்கிழமை (3) திங்கட்கிழமை

24. பின்வரும் உருவில் காணப்படும் இடைவெளிகளுக்கு வரவேண்டிய பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.





(1) (2) (3)

25. மோகன் புகையிரதத்தில் பயணம் செய்த போது அவனது முதுகுப்புறம் புகையிரதத்தின் எஞ்சினை நோக்கி இருந்தது. அப்போது அவனது இடது பக்கத்தில் சூரியன் மறைவதை அவதானித்தான். அப்புகையிரதம் மோகன் பயணம் செய்த வேளை எந்த திசையை நோக்கி பயணம் செய்தது?

(1) தெற்கு (2) வடக்கு (3) மேற்கு

[பக். 6ஐப் பார்க்க...

26. ஒன்றன் மீது ஒன்று அடுக்கப்பட்டுள்ள புத்தகங்களிடையே, மேலிருந்து ஏழாவது இடத்தில் சுற்றாடல் புத்தகமும், கீழிருந்து ஒன்பதாவது இடத்தில் கணிதப் புத்தகமும் உள்ளது. இந்த சுற்றாடல் புத்தகத்திற்கும் கணிதப் புத்தகத்திற்குமிடையே எந்தவொரு புத்தகங்களுமில்லை. மாணவன் ஒருவன் இந்த புத்தக அடுக்கில் சுற்றாடல் புத்தகத்திற்கு மேல் ஒரு புத்தகத்தையும் கணிதப் புத்தகத்திற்கு கீழ் ஒரு புத்தகத்தையும் வைத்தானாயின் இந்த அடுக்கில் தற்போது உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

(1) 16 (2) 18 (3) 20

27.

15	**B**	
	13	
	17	**A**
	C	

இவ்வுருவை வெட்டி எடுத்து மடித்து ஒட்டும் போது ஓர் சதுரமுகி உருவாகும். அச் சதுரமுகியின் எதிர்ப்பக்க முகங்களில் உள்ள எண்களைக் கூட்டும் போது வரும் விடை அனைத்து எதிர்ப்பக்கங்களிற்கும் ஒரே எண்ணாகவே அமையும்.

இதனடிப்படையில், A , B , C ஆகிய இடைவெளிகளில் வரவேண்டிய இலக்கங்கள் யாவை?

(1) A = 5 , B = 6 , C = 8

(2) A = 6 , B = 4 , C = 8

(3) A = 6 , B = 4 , C = 7

28. கீழே தடித்த எழுத்தினால் தரப்பட்டுள்ள கூற்றினை உண்மை எனக்கொண்டு அதனை அடுத்து தரப்படும் மூன்று கூற்றுக்களில் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

- **சீனி கரையக் கூடியது. பறவைகளில் காகங்கள் மாத்திரம் கரையும்.** எனவே,

(1) காகம் கரையும்.


(2) சீனி கரைந்தாலும் காகமாகாது.

(3) வேறு பறவைகள் கரைவதில்லை.

29. எனது தங்கையின் தந்தையின் சகோதரனின் தந்தையை எனது தந்தை சந்திக்கும் வேளைகளில் என்ன உறவு முறையைக் கூறி அழைப்பார்?

(1) சகோதரன் (2) தந்தை (3) மகன்


30. மாணவன் ஒருவன் தயாரித்த எண் இயந்திரம் ஒன்று கீழுள்ள உருவினால் காட்டப்பட்டுள்ளது. அந்த இயந்திரத்தினுள் எண் அட்டை ஒன்றை உட்செலுத்தினால் அது அவ்வெண்ணுடன் 6ஐக் கூட்டி கிடைக்கப்பெறும் எண்ணிலிருந்து 3ஐக் கழித்து விடையைத் தரும்.




ஒற்றை எண்ணொன்றை விடையாகப் பெற வேண்டுமாயின் பின்வரும் எண் அட்டைகளுள் எந்த எண் அட்டையை செலுத்த வேண்டும்?

(1) 9 (2) 4 (3) 3


31. பின்வரும் உருக்களில் ஓர் உரு ஏனைய இரு உருக்களிலிருந்தும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. அவ் வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.



(1)



(2)




(3)

[பக். 7ஐப் பார்க்க...

www.ikedu.lk

32. குமரன் தீக்குச்சிகளைக் கொண்டு கீழே காட்டப்பட்டுள்ள உரோம எண்களை அடிப்படையாகக் கொண்ட புதிர் ஒன்றை அமைத்தான்.



இந்தப் புதிரை குமரனின் நண்பர்கள் மூவரிடம் வினவிய போது அவர்கள் கூறிய கூற்றுக்கள் வருமாறு

M – என்னால் ஒரு தீக்குச்சியை மட்டும் வேறு இடத்தில் வைத்து புதிரை சரி செய்ய முடியும்.

N – என்னால் ஒரு தீக்குச்சியை மாத்திரம் அகற்றி புதிரை சரி செய்ய முடியும்.

O – என்னால் ஒரு தீக்குச்சியையும் தொடாமல் புதிரை சரி செய்ய முடியும்.

மேலே வழங்கபட்ட புதிர் தொடர்பாக M , N , O ஆகிய நண்பர்கள் கூறிய கூற்றுக்களுள்,

(1) M மாத்திரம் சரியானது.

(2) M, N, O ஆகிய யாவும் சரியானவை.

(3) M, N மாத்திரம் சரியானவை.


33. ஆறு மனிதர்களால் வீடொன்றை 15 நாட்களில் கட்டி முடிக்க முடியும். எனின், எல்லா மனிதர்களும் ஒரே திறனுடன் வேலை செய்கின்றனர் எனக் கருதும் போது மூன்று மனிதர்களைக் கொண்டு முதலில் கூறப்பட்ட வீட்டினைக் கட்டுவதற்கு எத்தனை நாட்கள் தேவை?

(1) 24 நாட்கள் (2) 30 நாட்கள் (3) 48 நாட்கள்

34. சுவர்க் கடிகாரமொன்று நேரம் நான்கு மணியைக் காட்டி நிற்கின்றது. இக்கடிகாரத்தின் நிமிடமுள் மற்றும் மணிமுள் ஆகியவற்றுக்கு இடையிலான கோணம் செங்கோணமாக அமைவதற்கு இந்தக் கடிகாரத்தின் நிமிட முள்ளானது எத்தனை தடவைகள் இக்கடிகார முகத்தினைச் சுற்றி வர வேண்டும்?

(1) 4 தடவைகள் (2) 5 தடவைகள் (3) 6 தடவைகள்

35. இங்கு தரப்பட்டுள்ள உருவில் எண்கள் ஒரு குறித்த கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. இந்தக் கோலத்திற்கு ஏற்ப A , B ஆகிய இடைவெளிகளில் வர வேண்டிய எண்கள் முறையே யாவை?




(1) XI உம் , XVIII உம்

(2) IX உம் , XVIII உம்

(3) X உம் , XIX உம்

36. அருகிலுள்ள உருவில் காணப்படும் ஒரு இடைவெளியை நீளத்தில் இரண்டு சதுரமுகிகளையும், அகலத்தில் இரண்டு சதுரமுகிகளையும், உயரத்தில் இரண்டு சதுரமுகிகளையும் கொண்டு நிரப்பலாம். இருப்பினும் இங்குள்ள ஒவ்வொரு இடைவெளியிலும் ஒரு சதுரமுகி வீதம் வைக்கப்பட்டுள்ளது. எனின், இந்த முழு உருவையும் நிரப்புவதற்கு இன்னும் எத்தனை சதுரமுகிகள் தேவைப்படுகின்றன?



(1) 64 (2) 56 (3) 49


37. சீதா என்பவர் பிறக்கும் போது அவரது தந்தையின் வயது 35 வருடங்களாகும். சீதாவை விட 4 வருடங்கள் இளமையான அவரது தம்பி பிறக்கும் போது அவரது தாயாரின் வயது 30 வருடங்கள் ஆகுமெனினன், சீதாவின் தந்தையினதும் தாயினதும் வயதுகளுக்கிடையிலான வித்தியாசம் யாது?

(1) 5 வருடங்கள் (2) 6 வருடங்கள் (3) 9 வருடங்கள்

[பக். 8ஐப் பார்க்க...


www.ikeu.lk

38. வட்டமொன்றின் நான்கில் ஒரு பங்கு (1/4) வடிவிலமைந்த காணியொன்றின் மாதிரிப்படம் அருகில் தரப்பட்டுள்ளது. இக்காணியின் அரைவாசிப் பகுதியில் பூந்தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. அப்பகுதி உருவில் நிழற்றிக் காட்டப்பட்டுள்ளது. இப்பூந்தோட்டத்தின் சுற்றளவு 20m ஆகுமெனின், இக்காணியின் மொத்த சுற்றளவு எத்தனை மீற்றர்களாகும்?




(1) 26m (2) 25m (3) 24m


- பாடசாலை ஒன்றின் கட்டடங்கள் அமைந்துள்ள விதம் கீழுள்ள வரிப்படம் மூலம் காட்டப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு 39ம், 40ம் வினாக்களுக்கு விடை தருக.




39. பிரதான நுழைவாயிலினூடாக நடைபாதை வழியே உள்நுழையும் போது A எனக் குறித்துக் காட்டப்பட்டுள்ள பகுதியில் பாதைகளை தெளிவுபடுத்துவதற்கான வரிப்படமொன்று வரையப்பட்டுள்ளது. அவ்விடத்தில் வரையப்பட்டுள்ள வரிப்படத்தினை சரியாகக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.



(1)



(2)



(3)

40. பின்வரும் கூற்றுக்களுள் **தவறான** கூற்றினைத் தெரிவு செய்க.

(1) பிரதான நுழைவாயிலினூடாக நுழையும் ஒருவர் மைதானத்தை முதலாவதாக தனது இடக்கைப் பக்கத்தில் காண்பார்.

(2) துணை நுழைவாயிலினூடாக நுழையும் ஒருவர் வகுப்பறைத் தொகுதியை நேர் எதிரே காணும் அதேவேளை அதிபர் அலுவலகத்தினை தனது இடக்கைப் பக்கத்தில் காண்பார்.

(3) வகுப்பறைத் தொகுதியிலிருந்து பிரதான மண்டபத்திற்கு வருகை தரும் ஒருவர் தனது பயணத்தின் போது இடக்கைப்பக்கத்திற்கு ஒரு தடவையும் வலக்கைப்பக்கத்திற்கு ஒரு தடவையும் திரும்புவார்.

***

www.ked.lk

CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACA
CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACA
CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACA
CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACA
CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACADEMY CHAMPION ACA

CHAMPION ACADEMY – NEW KATTANKUDY

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOL AND FOR THE AWARD OF BURSARIES, 2022

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை, 2022

வினாத்தாள் **II**

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் 30 வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** எழுதுக.(சில வினாக்களுக்கு உப பகுதிகளும் உள்ளன.)
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **கோட்டினை மாத்திரம்** இடுக.
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
பெற்ற புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கியபுள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

[பக். 2ஐப் பார்க்க...

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

01. பின்வரும் பந்தியை வாசிக்க.

சேற்றில் பள்ளம் தோண்டி அதில் பதுங்கி வாழும் மீன் விரால் மீன்தான். விரால் மீன் நன்னீரில் வாழும் தன்மையுடைய மீனினமாகும். விரால் மீனின் தோற்றம் உருண்டை வடிவமாக நீண்ட உடலைப் பெற்றிருக்கும். இதன் தலை பாம்பின் தலையைப் போன்று காணப்படும். இம் மீன்கள் நீர், பாசி மற்றும் தாவரங்கள் நிறைந்த உள்நாட்டு நீர் நிலைகளான ஏரி, குளம், குட்டை போன்றவற்றில் வசித்து வருகின்றன.

● பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

01. விரால் மீன்கள் எவ்வகையான நீரில் வாழும் தன்மை கொண்டவை? :.....

02. விரால் மீன்கள் காணப்படும் உள்நாட்டு நீர்நிலையொன்றைக் குறிப்பிடுக. : .....

03. ''சிரசு'' என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக.

: .....

04. பந்தியில் வந்துள்ள அ.ஃறிணை பன்மைப் படர்க்கைப் பெயர்ச் சொல்லொன்றை எழுதுக.

: .....

05. 'மீனினமாகும்' எனும் சொல்லைப் பிரித்து எழுதுக. : ..... + ...

06. விரால் மீன்கள் அவற்றின் பாதுகாப்பிற்காக எவ்வாறு பதுங்கி வாழும் இயல்பைக் கொண்டுள்ளன?

: .....

02. அ.ஃறிணை, பன்மை, பலவின்பால், பெயர்ச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

மனிதன் சிங்கம் வாகனங்கள் சிறுமி மாணவர்கள்

03. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

பின்பற்றுவோம் / நல்ல / கூறப்பட்டுள்ள / வாழ்க்கையில் / கருத்துக்களை / திருக்குறளில்

: .....

04. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்புகள் **சரியாயின்** ''✓'' எனவும் **பிழையாயின்** ''×'' எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

(i) மக்கள் கூட்டம் மெல்ல மெல்ல கலையத் தொடங்கியது. (.....)

(ii) ''வண்ணத்துப்பூச்சிகள் அழகானதா?'' என தம்பி கேட்டான். (.....)

(iii) பறவைகளின் நாதம் காட்டின் அமைதியைக் கலைக்கின்றன. (.....)

(iv) காற்று வேகமாக வீசியதால் மரங்கள் ஒன்றுடன் ஒன்று உரசின (.....)

05. (1) பின்வரும் வாக்கியத்தை பெண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.

அவர் தான் இந்த நாட்டின் பேரரசர் : .....

(2) பின்வரும் பலவின்பால் வாக்கியத்தை ஒன்றன்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.

சிங்கங்கள் காட்டில் மானை வேட்டையாடின : .....

06. (1) பின்வரும் கருத்தினைத் தரும் பழமொழியை புள்ளிக்கோட்டில் எழுதுக.

மன நிறைவே ஒருவனுக்கு மிகச் சிறந்த செல்வமாகும்.

: .....

[பக். 3ஐப் பார்க்க...

www.lkedu.lk

(2) பின்வரும் பழமொழியில் காணப்படும் இடைவெளியினை நிரப்பி பழமொழியை பூர்த்தி செய்க.

அடற விதைத்து .....

07. (1) பின்வரும் தொடர்மொழிக்கான தனிச்சொல்லைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

மக்கள் பிரதிநிதிகள் கூடுமிடம் : .....

(2) பின்வரும் உவமைத் தொடரின் கருத்தினை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

நீர் மேல் எழுத்துப் போல : .....

08. கீழே தரப்பட்டுள்ள கவிதையில் உள்ள **வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.**

கீழாறோலை மேலாறோலை

எண்ணிப் பார்த்தால் பதினாறோலை

.....

கிறுகியடிக்கப் பாலாறு பாலாறு...

09. பின்வரும் வாக்கியத்தை வினா வாக்கியமாக மாற்றி எழுதுக.

கமலன் பந்து அடித்தான். : .....

10. பின்வரும் சுருக்கக் குறியீட்டின் விரிவை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.


இ. அ. தி : .....

11. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

(i) Farmer : ..... (ii) Village : .....


12. பின்வரும் ஒவ்வொரு உருவிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(1)



: .....

(2)



: .....

13. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

(1) is / That / tree / a / mango : .....

(2) drinking / am / I / water : .....

14. 'செல்லம் மிதுல' எனும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

: .....

[பக். 4ஐப் பார்க்க...

www.lkedu.lk

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

உங்கள் இலக்கம் எத்தனை? : .....

16. 17489 எனும் எண்ணில்,

(1) இலக்கம் 7 அமைந்துள்ள இடம் யாது? .....

(2) இவ் எண்ணை விரித்தெழுதுக. : .....

17. வியாபாரி ஒருவர் தன்னிடமிருந்த பென்சில்களில் $\frac{3}{4}$ ஐ விற்றார். விற்றபின் அவரிடம் 16 பென்சில்கள் எஞ்சியிருந்தன. அவரிடம் ஆரம்பத்தில் இருந்த பென்சில்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

18. வருண் 375 மாம்பழங்களையும், ஜனா 450 மாம்பழங்களையும், மாலா 580 மாம்பழங்களையும் வாங்கினார்கள். வருணும் ஜனாவும் வாங்கிய மாம்பழங்களின் மொத்த எண்ணிக்கைக்குக் சமனாவதற்கு மாலா மேலும் எத்தனை மாம்பழங்களை வாங்க வேண்டும்?

: .....

19. துளசி ஒரு புத்தகத்தை வாசிப்பதற்கு 2 மணித்தியாலங்கள் 45 நிமிடங்கள் எடுத்தாள். அவள் அப்புத்தகத்தை பி.ப 2.30 இற்கு வாசித்து முடித்தாள்.

(i) துளசி புத்தகத்தை வாசிக்கத் தொடங்கிய நேரம் யாது? : .....

(ii) அவன் புத்தகத்தை வாசித்து முடித்த நேரத்தினை 24 மணித்தியாலக் கடிகார நேரத்தில் எழுதுக. : ..... : .....

20. முற்றாக நிரம்பியிருந்த ஒரு நீர்த்தொட்டியிலிருந்து 1275ℓ நீர் விநியோகிக்கப்பட்டுள்ளது. தொட்டியில் எஞ்சியிருக்கும் நீரின் அளவு 3725ℓ ஆகும். நீர்த்தொட்டி முற்றாக நிரம்பியிருந்த போது அதில் இருந்த நீரின் அளவு யாது?

: ..... லீற்றர்கள்

21. 4m 80cm நீளமுள்ள ஒரு பூப்பாத்தியை மறுபடியும் அமைத்த போது அதன் நீளம் 7m 25cm ஆக இருந்தது அதன் அதிகரித்த நீளம் யாது?

: ..... m ..... cm


22. விமல் 15km 50m தூரத்தை பேருந்திலும் 8km 90m தூரத்தை முச்சக்கரவண்டியிலும் பயணம் செய்தான். அவன் பயணம் செய்த மொத்தத் தூரம் யாது?

: ..... km ..... m

23. ஒருவர் 612 அரிசிச் சாக்குகளை 6 லொறிகளில் சம எண்ணிக்கைகளில் ஏற்றினார். ஒரு லொறியில் உள்ள அரிசிச் சாக்குகளின் எண்ணிக்கை யாது?

: .....

24. அருகே தரப்பட்டுள்ள உருவில் பூச்சியம் தசம் ஆறினைத் தவிர்த்து மீதியாகவுள்ள பகுதிகளை பேனையால் அல்லது பென்சிலால் நிழற்றிக் காட்டுக.



25. பிறந்த நாள் நிகழ்வொன்றிற்காக மண்டபம் ஒன்றில் ஆறு கதிரைகள் வீதம் 12 நிரைகளிலும், பத்து கதிரைகள் வீதம் 8 நிரைகளிலும் கதிரைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்த கதிரைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

[பக். 5ஐப் பார்க்க...

www.ikedu.lk

26. கல்விச் சுற்றுலா செல்வதற்கு இன்னும் 63 நாட்களே உள்ளன என ஆசிரியர் மாணவர்களிடம் கூறினார். உடனே அந்த நாட்களின் எண்ணிக்கை எத்தனை வாரங்களாகும் என மாணவர்களிடம் வினவிய போது மாணவர்கள் கூறக்கூடிய சரியான விடை யாது?


: .....

27. ஒரு நீளமான வாங்கில் மூன்று மாணவர்கள் அமரலாம். நிகழ்வொன்றிற்கு 312 மாணவர்கள் வருகை தந்துள்ளனர். இம் மாணவர்கள் அனைவரையும் அமரச் செய்ய எத்தனை வாங்குகள் தேவை?

: .....

28. பின்வரும் சிட்டையைப் பூர்த்தி செய்க.

பொருள்	5 பொருளின் விலை		வாங்கிய அளவு	விலை	
	ரூபாய்	சதம்		ரூபாய்	சதம்
பால்மா	2500	00	.....	2000	00
தயிர்ச் சட்டி	225	00	8	.....	.....
விசுக்கோத்துப் பெட்டி	850	00	2	340	00
			மொத்தப் பணம்	2700	00



29. நாற்று மேடையொன்றில் உள்ள சில நாற்று வகைகள் பற்றிய தகவல்கள் அருகிலுள்ள நிரல் வரைபில் தரப்பட்டுள்ளன.

(1) கத்தரிச் செடியை விட எத்தனை மாங்கன்றுகள் இங்கு அதிகமாக உள்ளன?

: .....

(2) இந்த நாற்று மேடையில் காணப்படும் மொத்த நாற்று வகைகளின் எண்ணிக்கை யாது?

: .....

- 30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்ட விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

30. சிவனொளிபாத மலை, கதிர்காமம் ஆகியன,

(1) பௌத்த மக்களின் வழிபாட்டுக்குரிய புனிதத் தலங்களாகும்.

(2) கிறிஸ்தவ சமூகம் யாத்திரை செல்லும் இடங்களாகும்.

(3) இலங்கை வாழ் அனைத்தின மக்களும் யாத்திரை செல்லும் இடங்களாகும்.

31. சூரிய ஒளிக்குத் துலங்கலைக் காட்டாத மலர் எது?

(1) சூரயகாந்தி (2) நித்தியகல்யாணி (3) மூக்குத்திப் பூண்டு

32. வண்ணத்துப்பூச்சிகளின் முட்டைகளில் இருந்து எத்தனை நாட்களின் பின்னர் குடம்பி வெளியேறும்?

(1) ஐந்து (2) ஆறு (3) ஏழு

33. இரையைக் கொண்டு மீன்களைப் பிடிக்க செம்படவன் பயன்படுத்தும் உபகரணம் யாது?

(1) வலை (2) தூண்டில் (3) பறி

[பக். 6ஐப் பார்க்க...

www.ikedu.lk

34. பழுதடைந்த நிலையில் காணப்படும் தேங்காய்ப் பாதியில் அவதானிக்க முடியாத மாற்றம் எது?

(1) திரண்டு போய் இருத்தல்.

(2) கறுப்புப் புள்ளிகள் காணப்படல்.

(3) எச்சிற்றன்மை ஏற்பட்டிருத்தல்.

35. செயற்கையாகப் பெறப்படும் பானங்களின் பண்பொன்றல்லாதது எது?

(1) நிறமூட்டிகள் சேர்க்கப்பட்டிருத்தல்.

(2) அதிகளவு சீனி சேர்க்கப்பட்டிருத்தல்.

(3) சுத்தமான புதிய பானங்களாக இருத்தல்.

36. எட்டு இதழ்களைக் கொண்ட வெள்ளை நிறப் பூ பின்வருவனவற்றுள் எது?

(1) செடி மல்லிகை (2) கொடி மல்லிகை (3) காட்டு மல்லிகை

37. வீடுகளில் அரிசியிலிருந்து உமி, தூசு போன்றவற்றை அகற்றுவற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்,

(1) அரிக்குஞ்சட்டி (2) சுளகு (3) பன்னாடை

38. உற்பத்தித் திகதிக்கும் காலாவதித் திகதிக்கும் இடையில் மிகக் குறைந்தளவான நாட்களைக் கொண்டிருக்கும் பொதி செய்யப்பட்ட உணவு யாது?

(1) நூடில்ஸ் (2) ஜெலிக்கலவை (3) பாண்

39. இலங்கைக்கே உரித்தான மீனினம் பின்வருவனவற்றுள் யாது?

(1) கலவத்தன் (2) நெத்தலி (3) புலத்ஹய்யா

40. காற்றின் மூலம் மாத்திரம் பரம்பலடையும் இரு வித்துக்களைக் கொண்டுள்ள விடை யாது?

(1) துத்திரிப்புல் , காசித்தும்பை

(2) சீதேவியார் செங்கழுநீர் , எண்ணெய்

(3) மரமுந்திரி , இறப்பர்

41. பின்வரும் எப் போஷாக்குக் குறைபாட்டினால் பத்து வயதிற்குட்பட்ட சிறுவர்களின் வளர்ச்சி குன்றும்?

(1) காபோவைதரேற்று (2) புரதம் (3) கொழுப்பு

42. பாரமான உருளை வடிவ மரக்குற்றியொன்றை பின்வரும் எவ்வகையான தரையில் உருட்டிச் செல்லுதல் மிக இலகுவானதாக அமையும்?

(1) மணற்பாங்கான தரை

(2) சிறுகற்கள், பரல்கள் நிறைந்த தரை

(3) சீமேந்துத் தரை

43. 'காற்றுக் கிலுக்கி' என்பது,

(1) சிறுவர்கள் விளையாடப் பயன்படுத்தும் ஓர் உபகரணமாகும்.

(2) காற்றுச் சக்தியினால் இயங்கும் ஒரு வாகனமாகும்.

(3) பிராணிகளிடமிருந்து தாவரங்களை பாதுகாக்க அமைக்கப்பட்டிருக்கும் அமைப்பாகும்.

[பக். 7ஐப் பார்க்க...

www.ikedu.lk

44. வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களால் எமது நாட்டின் மண்ணின் செழுமையை நீக்கும் நோக்கத்துடன் எரித்து அழிக்கப்பட்ட தாவர வகை எது?

(1) இலுப்பை (2) திருக்கொன்றை (3) காட்டாமணக்கு

45. குறித்த சில மாணவர்கள் உணவு உண்ட விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

- சீதா சோறும் நெத்தலிக் கருவாட்டுக் குழம்பும் முட்டைப் பொரியலும்.
- ஆசிம் சோறும் இறைச்சிக் கறியும் கீரைச் சுண்டலும்.
- குமார் சிவப்பரிசிச் சோறும் போஞ்சிக் கறியும் வாழைப்பழமும்.

இம் மாணவர்களில் சிறப்பான உணவு வேளையொன்றிற்காக கலப்புணவை உண்டவர் யார்?

(1) சீதா (2) ஆசிம் (3) குமார்

46. பின்வரும் எந்த விளையாட்டில் பந்தை அடிப்பவரும் பந்தைப் போடுபவரும் ஒரே அணியைச் சேர்ந்தவராக இருப்பார்?

(1) கிரிக்கெற் (2) எல்லே (3) கிட்டிப்புள்

47. அந்நியர் ஆட்சிக் காலத்தில் அரச துரோகிகள் எனப் பெயரிடப்பட்டு, தண்டனை வழங்கியவர்களில் 18 பேரை இலங்கை அரசு விடுதலை வீரர்களாக 2017இல் பிரகடனப்படுத்தியது. அவர்களில் ஒருவர்,

(1) கொங்காலே கொட பண்டா (2) வீர புரண் அப்பு (3) சேர் ரீ. பி. ஜாயா

48. அமாவாசை தினத்துக்கு இரண்டு நாட்களின் பின்னர் தொடர்ச்சியாக ஏழு நாட்கள் வரையில் சந்திரனின் அமைவானது,

(1) பூர்வ பக்க பிறைச் சந்திர வடிவமாகும்.

(2) அபர பக்க பிறைச் சந்திர வடிவமாகும்.

(3) பூரணை பூரண சந்திர வடிவமாகும்.

49. கேத்தலொன்றைப் பயன்படுத்தி நீரைக் கொதிக்க வைக்கும் சந்தர்ப்பத்தில் கேத்தலின் வாய்ப் பகுதியில் கண்ணாடித் துண்டொன்றைப் பிடிக்கும் போது பின்வருவனவற்றுள் யாது நிகழும்?

(1) கண்ணாடியில் நீராவி தோன்றுதல்.

(2) கண்ணாடியில் புகை படிதல்.

(3) கண்ணாடியில் நீர்த் துளிகள் தோன்றுதல்.

50. ஒருவருக்குப் புகைப்படத்தை விரைவாக அனுப்புவதாயின் பயன்படுத்த வேண்டிய இலகுமுறை எது?

(1) தொலைநகல் (2) பதிவுத்தபால் (3) மின்னஞ்சல்

51. 1910ஆம் ஆண்டில் மது ஒழிப்பு இயக்கத்தை இலங்கையில் ஆரம்பித்த பெரியார்,

(1) வண.எஸ். மஹிந்த (2) கலாநிதி. ஆனந்த குமாரசுவாமி (3) சேர். ரீ.பி. ஜயதிலக்க

52. மாற்றுப் பயிர்ச் செய்கை முறைகளைக் கையாள்வதனால் கிடைக்கும் பிரதிகூலமாக அமைவது எது?

(1) இடவசதி குறைவான இடங்களில் பயிர் செய்யலாம்.

(2) பயிர்ச் செய்கையைப் பராமரிக்க அதிக செலவு ஏற்படும்.

(3) பிராணிகள், மழை, வெயில் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கலாம்.

[பக். 8ஐப் பார்க்க...

www.ikedu.lk


53. வட மத்திய மாகாணத்தில் வசிக்கும் அதிகளவான மக்கள் சிறுநீரக நோய்க்கு உள்ளாகி உள்ளனர். இதற்கான காரணமாக அமைவது,

(1) குடிநீர் மாசடைந்தமை (2) குடிநீர்ப் பற்றாக்குறை (3) சிறுநீரகத் தொற்று

54. இலங்கையின் பிரதான வர்த்தகத் துறைமுகம் அமைந்துள்ள மாவட்டம் எது?

(1) திருகோணமலை (2) அம்பாந்தோட்டை (3) கொழும்பு

55. அருகில் தரப்பட்டுள்ள உடுக்கோலமானது குறித்து நிற்பது,



(1) பெருங்கரடி

(2) சிறு கரடி

(3) விருட்சிகம்

56. புவியில் இரவு பகல் மாறி மாறி நிகழ்வதற்கான காரணம் யாது?

(1) புவி சூரியனைச் சுற்றி வலம் வருதல்.

(2) புவி தன்னைத் தானே சுற்றுதல்.

(3) சந்திரன் புவியைச் சுற்றி வலம் வருதல்.

57. இலங்கையில் ஒலிம்பிக் பதக்கம் வென்ற முதலாவது வீராங்கனை யார்?

(1) டங்கன் வைட் (2) சுசந்திகா ஜயசிங்க (3) தமயந்தி தர்ஷா

58. ஒரு குறித்த பிரதேசமொன்றில் சூறாவளி ஏற்படப்போகின்றது என்பதை முன்னெச்சரிக்கையாக இயற்கைச் சூழல் வெளிக்காட்டும் முறைகளில் ஒன்று யாது?

(1) கடலில் நிலநடுக்கம் ஏற்படுதல்.

(2) கடலில் தாழமுக்கம் உருவாகுதல்.

(3) கடல் நீர் பின்னோக்கிச் செல்லுதல்.

59. அருகிலுள்ள குறியீடானது குறித்து நிற்பது,



(1) குப்பைகளைக் கொட்ட வேண்டாம் என்பதாகும்.

(2) குப்பைத்தொட்டி ஆபத்தானது என்பதாகும்.

(3) குப்பைத்தொட்டியிலோ, சூழலிலோ விடுவித்தல் கூடாது என்பதாகும்.

60. "நான் ஒரு வீட்டு மீன் தொட்டியினுள் வசிக்கும் மீனாவேன்." எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெறல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டல்களும் சரியாக அமைந்திருத்தல் வேண்டும்.)

- .....

  .....

- .....

  .....

- .....

  .....

***

www.ikeau.lk